# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண். 34/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | **முருகவேல்** | மதம் | .. | **இந்து** |
| தந்தை / கணவர் பெயர் | .. | **ராஜா** | தொழில் | .. | **பால்வளத்துறை** Junior Inspector |
| வயது | .. | 46 | நாள் | .. | 19.01.2026 |
| கிராமம் | .. | **சங்ககிரி** TB Road | | | |
| வட்டம் | .. | **சங்ககிரி** | | | |

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ஆம் நாள் திங்கள்கிழமை என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திருமதி.இரா.இளமதி மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

வாதி தரப்பு 1 ஆம் சாட்சியின் முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 1-ஆம் சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். அந்த விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான். எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

1) 18.07.2008 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தின் இணையவழி சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 16.04.2004 தேதியிட்ட பாகப்பாத்திய விடுதலைப் பத்திரத்தின் இணையவழி சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 01.03.2016 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தின் இணையவழி சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 08.03.2023 தேதியிட்ட சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் **வா.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) பிரதிவாதி கையொப்பமிட்ட ஒப்புகை அட்டை எண்ணிக்கை 1 அசல் **வா.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 10.03.2023 தேதியிட்ட சட்ட பதிலறிவிப்பின் சார்வு நகல் **வா.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வா.சா.1 ன் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2026.01.19 16:53:25 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.